www.tamilarangam.net






# பிரபாகரனைச் சுட்டு வீழ்த்திய வரதராஜப் பெருமாள்

வன்னிக்காட்டில் புலிகள் இயக்கத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளின் போது, நித்திகைக்குளத்தில் தான் இந்தியப்படையினரின் பிரதான முகாம் இருந்தது. வன்னிக் காட்டில் புலிகளுக்கு எதிரான போரின் நடவடிக்கை மையம் அதுதான்.

யாழ் குடாநாட்டில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது இந்தியப் படைக்கு புலிகளின் இராணுவ ஆற்றலும், கெரில்லாப் போர்திறனும் விளங்கிவிட்டது.

எனவே வன்னிப்போர்க் களத்தில் 'மெதுவாக ஆனால் உறுதியாக' என்ற கொள்கையுடன் தனது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

காட்டுக்குள் இந்தியப் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களும் அவர்களின் நடவடிக்கைகளை மந்தகதிக்கு உள்ளாக்கின.

வேகமாகச் சென்றால் புலிகளின் பொறிகளுக்குள் சிக்கி பாரிய உயிரிழப்பை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அத்துடன் ஆயுத தளபாடங்களை புலிகளிடம் இழப்பதன் மூலம், புலிகளுக்கு புதுப் பலத்தையும் கொடுப்பதாகிவிடும் என்று கருதியே இந்தியப் படையினர் 'மெதுவாக ஆனால் உறுதியாக' என்ற கொள்கையை வகுத்தனர்.



ஆனால், தமது பலம், எதிரியின் பலம் இரண்டையும் கணக்கில் கொண்டு இந்தியப் படை அதிகாரிகள் வகுத்த கொள்கையை இராணுவ விமர்சகர்கள் பலரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

## கட்டுக்கதைகள்

புலிகளின் திறனை மக்கள் அறிந்து விட்டால், தங்கள் மதிப்பு என்னாவது என்ற நினைப்பில் ஏனைய இயக்கங்களும் சில கட்டுக்கதைகளை கிளப்பிவிட்டன.

'பிரபாகரனின் முகாமை சுற்றி வளைத்தது இந்தியப்படை. அந்த நேரம் புதுடில்லியில் இருந்து வந்த உத்தரவு காரணமாக படைகள் திரும்பிவிட்டன' என்று ஒரு கதை அடிபட்டது.

படைகள் பிரபாகரனின் முகாமை சுற்றிவளைத்துவிட்டு, புதுடில்லியில் இருந்து உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்வரை, புலிகள் என்ன தூங்கிக் கொண்டிருந்தனரா? அபத்தமான அந்தக் கட்டுக்கதையை இப்போதுகூட் சிலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

'பிரபாகரனது உயிருக்கு ஊறு நேருவதை இந்திய அரசு விரும்பவில்லை' என்பது இன்னொரு கதை.

வன்னிக்காட்டில் பிரபாகரனின் முகாம் இருக்கக்கூடும் என்று கருதப்பட்ட பகுதிகள்மீது இந்திய விமானங்கள் வட்டமிட்டன. குண்டுகளை மழையாகப் பொழிந்தன.

பிரபாகரன் எங்கிருக்கிறார் என்று பார்த்து, அவர்மீது படாமல் விழுவதற்கு குண்டுகளுக்கு என்ன கண்ணா இருந்தது? பிரபாகரனின் உயிருக்கு ஊறு விளைவிக்க எண்ணமில்லையென்றால் குண்டுமழை எதற்காக?

இந்தியப் படையால்கூட வன்னிக் காட்டுக்குள் முன்னேற முடியவில்லை. என்ற உண்மையை சிலரால் நம்ப முடியாமல் இருந்தது.

இந்தியப்படை தொடர்பாக இருந்த பிரமையும் அதற்கு ஒரு காரணமாக இருந்தது. பாரிய படைபலத்துடன் சென்றால் புலிகளை ஊதித்தள்ளிவிடலாம் என்று கெரில்லாப் போர் அனுபவம் இல்லாத இயக்கங்களின் தலைவர்களும் கனவு கண்டுகொண்டிருந்தனர்.

தங்கள் கனவுகளுக்கும், பிரமைகளுக்கும் மாறாக போர் நிலவரம் அமைந்தபோது அவர்கள் எல்லோருமே கட்டுக்கதைகளை நாடினார்கள்.

பிரபாகரனையோ புலிகள் இயக்கத்தையோ பாதுகாக்க வேண்டிய அவசியம் இந்திய அரசுக்கு ஏன் ஏற்படவேண்டும்? என்ற கேள்விக்கு யாரிடமும் பதில் இருக்கவில்லை.

இந்திய அரசு காலால் இட்ட பணியை தலையால் செய்யக்கூடிய இயக்கங்கள் இருந்தன. செய்துகொண்டும் இருந்தன.

தன் கருத்துக்களை ஏற்காத, சுய கெளரவம் பார்க்கின்ற புலிகள் இயக்கத்தை இந்தியா பாதுகாக்க முற்படுவதற்கு ஒரு காரணமும் இருக்கவில்லை.

இந்தியப் படையின் முதல் நடவடிக்கைகூட யாழ்ப்பாணம் கொக்குவிலில் பிரபாகரனை பிடிக்கும் திட்டத்துடன்தான் ஆரம்பமானது.

## கோயபல்ஸ்

சிலர் வேறு காரணம் கூறினர். 'பிரபாகரனுக்கு ஊறு நேருமானால் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடையும் என்று ராஜீவ் காந்தி நினைத்திருக்கலாம் அல்லவா?' என்கின்றனர்.

அதுவும் தவறான அபிப்பிராயம்தான்.

ஏனெனில், அமிர் கொலையால் ஏற்பட்ட அனுதாபத்தை, பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற செய்தி ஏற்படுத்திய தாக்கம் அடித்துச் சென்றுவிட்டது.

அமிர்தலிங்கத்தைவிட பிரபாகரனுக்கு தமிழ் மக்களிடம் ஆதரவு இருக்கிறது என்பதை கணிப்பிடத் தவறிவிட்டனர்.

இந்திய வானொலி, தொலைக்காட்சி உட்பட, இந்தியப் பத்திரிகைகளும் வரதராஜப் பெருமாள் சொன்னதை நம்பி அச் செய்தியை பெரிதாக வெளியிட்டன.

இந்திய வானொலியிலும், தொலைக் காட்சியிலும் அச்செய்தியை கேட்டதும் தமிழக மக்கள் காட்டிய பிரதிபலிப்பு இந்திய அரசையே திகைக்க வைத்தது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வெள்ளைக் கொடிகள் உடனடியாக பறக்க விடப்பட்டன. எங்கும் சோகமயமான நிலை ஏற்படத் தொடங்கிவிட்டது.

இலங்கையிலும் தமிழ் பேசும் மக்களிடம் அனுதாப அலை வீசத் தொடங்கியது. இந்தியப் படைதான் பிரபாகரனை பிடித்து வைத்துக் கொண்டு கதை கட்டி விடுகிறதோ? என்று மக்கள் சந்தேகித்தனர்.

மொத்தத்தில், வரதராஜப் பெருமாள் புலிகளுக்கு எதிராக செய்த பிரசாரம், புலிகளுக்கு சாதகமான பிரசாரமாக மாறியது.

ஆனாலும் வரதராஜப் பெருமாள் சற்றும் சளைக்கவில்லை. பத்திரிகையாளர்களுக்கு

எப்படிச் சொல்கிறேன் தெரியுமா? மேலே படியுங்கள் புரியும்.

## மாபெரும் கதை

1989, ஜூலை 13ல் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப் பட்டனர்.

அந்த அமளி அடங்குவதற்கு இடையில், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு ஒரு தகவல் எட்டியது.

அமிர் கொலை விடயத்தில் பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் இடையே கருத்து முரண்பாடு வெடித்தது.

அமிரை தீர்த்துக்கட்ட பிரபா திட்டம் தீட்டியது மாத்தையாவுக்கு தெரியாது. அதனால் பிரபாகரனுடன் பிரச்சனைப் பட்டார் மாத்தையா.

பிரச்சனையின் முடிவில் மோதல் மூண்டது. மாத்தையாவின் கைதான் மேலோங்கியது.

பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மெய்க்காவலர்களும் கொல்லப்பட்டனர்.

கிடைத்த தகவல் அதுதான். ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களுக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

முதற்காரியமாக இந்திய உளவுப் பிரிவான 'றோ' விடம் தெரிவித்தனர்.

'றோ' அதனை மளமளவென்று ராஜீவ் காந்திக்கு தெரிவித்தது.

உடனே பெரும் பிரசாரமாக முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

தன் வாயாலேயே அச் செய்தியை தெரிவிக்க ஆசைப்பட்டார் வரதராஜப் பெருமாள்.

பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் அனைவருக்கும் அழைப்புக்கள் பறந்தன. ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்கள், மாகாணசபை அலுவலகங்கள் எங்கும் ஒரே கொண்டாட்டம்.

தங்களுக்கு கிடைத்த தகவலை சரிபார்க்கக்கூட அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. அமிர் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டு பலியானவர்களில் ஒருவர் மாத்தையாவின் மெய்க்காவலராக இருந்தவர் என்ற தகவல் கூட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு தெரியவில்லை.

அது தெரிந்திருந்தால், அமிர் கொலை விவகாரத்தில் பிரபா- மாத்தையா கருத்து முரண்பாடு என்ற கதையை நம்பியிருக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்ல, அமிர் கொலையை வைத்து தமிழ் மக்களிடம் புலிகளுக்கு எதிரான உணர்வை ஏற்படுத்த ஈ.பி.ஆர். எல்.எஃப். முயற்சி செய்தது அல்லவா.

அந்த முயற்சியைக்கூட, பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற பிரசாரம் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரே பாழடித்தும் விட்டனர்.

வரதராஜப் பெருமாள் பின்வரும் தகவலை திட்டவட்டமாகக் கூறினார்:

"பிரபாகரனின் உடல் இறுதி அஞ்சலிக்காக வல்வெட்டித்துறையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது நெற்றியில் திலகமிடப்பட்ட நிலையில் பூத உடல் காணப்படுகிறது."

அதைத் தொடர்ந்து இன்னொரு செய்தியையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்டது.

"வல்வெட்டித்துறையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பிரபாகரனின் உடலை மாத்தையா குழுவினர் எடுத்துச் சென்றுவிட்டனர். மக்கள் அஞ்சலி செலுத்தினால் பிரபாகரன்மேல் அனுதாபம் ஏற்பட்டுவிடும் என்று நினைத்தே உடலை எடுத்துச் சென்றுவிட்டனர்."

"பிரபாகரனுடன் கிட்டுவும் கொல்லப் பட்டார். கிட்டுவின் உடலை உடனடியாக எரித்து விட்டார்கள்." என்றும் செய்திகள் வெளியாகின.

பிரபாகரன் மாத்தையா ஆகியோருக்கு இடையில் மோதல் நடந்ததாக தவறான தகவல் கிடைத்தது. அதனை ஈ.பி.ஆர். எல்.எஃப். நம்பிவிட்டது என்றதோடு கதை முடியவில்லை.

பின்னர் வரதராஜப் பெருமாள் சொன்ன கதைகள் யாவும் திட்டமிட்டே கூறிய பொய்களாக அமைந்தன.

வல்வெட்டித்துறையில் உடல் இருந்தது என்றதும், பிரபாகரனின் உடலுக்கு அவரது மனைவி திலகமிட்டார் என்று கூறியதும் வரதராஜப் பெருமாள் நன்கு தெரிந்தே சொன்ன பொய்கள்தான்.

## இந்தியப் பத்திரிகைகள்

தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் பல பிரபாகரன் பற்றி வெளியான தகவல்களை நம்பவில்லை.

கேள்விக்குறியுடன்தான் செய்திக்கு தலைப்பிட்டு இருந்தன.

தினமலர் பத்திரிகை மட்டும்தான் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று உறுதியாக நம்பிச் செய்திகளை வெளியிட்டது.

24.07.1989 அன்று தினமலர் வெளியிட்ட செய்தி இது:

"தமிழர் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டதை அடுத்து பிரபாகரனுக்கும் அவருடைய துணைத் தலைவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் தான் துப்பாக்கிச் சண்டை வரை சென்று, பிரபாகரன், கிட்டு மரணத்தில் முடிந்தது. தினமலர் நிருபர் பல்வேறு தரப்பிலும் திரட்டிய தகவல்கள் அதனை நிரூபிக்கின்றன. பிரபாகரன் கொலை செய்யப்பட்டு இன்றுடன் ஒருவாரம் முடிகிறது." என்று செய்தி வெளியிட்டது தினமலர்.

அத்தோடு நிறுத்தவில்லை. செய்தி மேலும் தொடர்கிறது பாருங்கள்:

"பல ஊர்களில் பிரபாகரன் படத்திற்கு மக்கள் வரிசையில் நின்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

பிரபாகரனையும் கிட்டுவையும் தீர்த்துக் கட்ட நேர்ந்தது ஏன்? என்பதை விளக்கி மாத்தையா பேசியுள்ள ஆடியோ கசட்டுக்கள் இலங்கைத் தமிழர் பகுதிகளில் ஆங்காங்கே ஒலிபரப்பப்படுகின்றன.

சில இடங்களில் பிரபாகரன், கிட்டு ஆகியோரின் படங்கள் ஒட்டப்பட்டு இதய அஞ்சலி என்று எழுதப்பட்டு பூக்கள் போடப் பட்டுள்ளன."

மேற்கண்ட செய்தி தினமலர் தானாக வெளியிட்ட செய்தி அல்ல. சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வட்டாரங்கள் கொடுத்த செய்தி.

## உறுதிப்படுத்தல்

"பிரபாகரன் உயிருடன்தான் இருக்கிறார். புரளிகளை நம்பவேண்டாம்" என்று தமிழ்நாட்டில் பல பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

தினமலரும் விடவில்லை. 25.07.89 அன்று தினமலர் வெளியிட்ட செய்தியைப் பாருங்கள்:

"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவருடைய தளபதியான மாத்தையாவால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை திட்டவட்டமாக நேற்று வெளியிட்ட ஒரே நாளிதழ் தினமலர்தான் என்பதை வாசகர்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

எல்லாப் பத்திரிகைகளிலும் கேள்விக் குறியுடன் வெளியான இந்த முக்கிய செய்தியை முழுமையாகவும், விரிவாகவும், ஆதாரபூர்வமாகவும் வாசகர்களுக்கு வழங்க தினமலர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது.

ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தினமலர் செய்தி பொய்யானது என்று சில நகரங்களில் சுவரொட்டி மூலம் செய்த பிரசாரம், கொழும்பில் நேற்றுப் பிற்பகல் இலங்கை அரசு வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிப்பினால் முடமாக்கப்பட்டுள்ளது." என்று தினமலர் செய்தி, வெளியிட்டதுதான் உச்சக்கட்டம்.

## மறுப்பு

பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மை என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியதாக செய்திகள் வெளியாகின.

செய்தியைப் பார்த்ததும் ஜனாதிபதி பிரேமதாசா கடுப்பாகிவிட்டார்.

புலிகளுடன் நடக்கும் பேச்சுக்களுக்கு லலித் கூறிய கருத்து குந்தகமாகிவிடும் என்று நினைத்தார் பிரேமதாசா.

உடனே மறுப்பு விடும்படி லலித் அத்துலத் முதலிக்கு பிரேமதாசாவிடம் இருந்து தகவல் பறந்தது.

"நான் அவ்வாறு கூறவில்லை" என்று பல்டியடித்தார் லலித். மறுப்பும் பத்திரிகைகளில் சுடச்சுட வெளியானது.

பிரபாகரன், மாத்தையா மோதல் செய்தி கட்டுக் கதை என்ற தகவலை புலிகள் பிரேமதாசாவுக்கு எட்டச் செய் திருந்தனர்.

## நக்கீரன் நாடகம்

சந்தனமரக் கடத்தல் மன்னன் வீரப்பன் விவகாரத்தில் சமாதான தூதராக சென்றவர் 'நக்கீரன்' பத்திரிகை ஆசிரியர் கோபால். அதனால் அவரது பெயர் சமீபத்தில் இலங்கைப் பத்திரிகைகளிலும் அடிபட்டது.

1989ல் 'நக்கீரன்' மூலம் கோபால் ஒரு காரியம் செய்தார்.

எந்தத் 'தினமலர்' பத்திரிகை பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற செய்தியை உறுதிப் படுத்தியோ, அதே தினமலர் பத்திரிகையை பிரபாகரன் வாசித்துக் கொண்டிருக்கும் காட்சியை நக்கீரன் முகப்பு அட்டையில் தாங்கிவந்தது.

பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று



வெளியான செய்தியைத் தாங்கிய 'தினமலரை' பிரபாகரன் ஓர் புன்னகையுடன் படித்துக் கொண்டிருந்த காட்சிதான் வெளியானது.

நக்கீரனில் பிரபாகரனின் புகைப் படம் வந்ததும்தான் தமிழ்நாட்டில் பலருக்கு பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று நிம்மதி ஏற்பட்டது.

ஆனால் அப் புகைப்படம் உண்மையானது அல்ல. என்ன நடந்தது தெரியுமா?

பிரபாகரன் போன்ற தோற்றமுடைய ஒருவரின் கையில் தினமலரை கொடுத்து படம்பிடித்தனர். பின்னர் புகைப்படத்தில் பிரபாகரனின் தலையை கச்சிதமாக பொருத்திவிட்டனர். 'நக்கீரன்' கோபால் ஓவியர் என்பதால் சிறப்பாக செய்து முடித்தார்.

பிரபாகரன் உயிருடன் இருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட பின்னர், நக்கீரன் கோபால் வாசகர்களுக்கு உண்மையைத் தெரிவித்தார்.

## பிரபாவுக்கு சந்தேகம்

பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற செய்தியை வன்னிக்காட்டில் இருந்து இரசித்துக் கேட்டார் பிரபாகரன்.

பின்னர் பிரபாகரன் பத்திரிகையாளர்களை முதன் முதலாக சந்தித்தபோது என்ன கூறினார் தெரியுமா?

"எனக்கே நான் இருக்கிறேனா என்று சந்தேகமாகிவிட்டது. என்னை நானே கிள்ளிப் பார்த்துக்கொண்டேன்."

கொழும்பில் புலிகளின் ஆதரவாளராக இருந்தவர் மாணிக்கசோதி. பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பதை நிரூபிக்க வீடியோ கசட் ஒன்றை ஏ.பி. செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து போட்டுக் காண்பித்தார்.

அதிலே, பிரபாகரன்,மாத்தையா, யோகி ஆகியோர் அருகருகே அமர்ந்திருந்தனர். யோகி எழுந்து பின்வருமாறு கூறினார்:

"இந்தியப் படை வன்னியில் மண்கவ்வியிருக்கிறது. எங்கள் தலைவரை நெருங்க முடியாதவர்கள், தங்கள் கையாலாகாத்தனத்தினால் பொய்யான பிரசாரங்களை செய்துவருகின்றனர்" என்று யோகி கூறினார். வீடியோ கசட்டில் இருந்தது அதுதான்.

பிரபாகரனின் உயிருக்கு ஊறு நேர்ந்தால், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு பாதகம் ஏற்படும் என ராஜீவ் கருதியிருந்தால்,பிரபாகரன் பலியானார் என்ற செய்தியை 'றோ'வும் முன்னின்று பரப்பியிருக்காது.

இந்தியப் படை பிரபாகரனை நெருங்கக்கூடாது என்று நிர்ப்பந்தம் இருந்ததா? என்று இந்திய அமைதிப்படை தளபதிகளில் ஒருவரான திபீந்தர் சிங்கிடமும் கேள்விகள் சென்றன.

அவர் ஓய்வுபெற்ற பின்னர் எழுதிய புத்தகத்தில் அக் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறார்:

"அப்படி எந்த நிர்ப்பந்தமும் எக் கட்டத்திலும் ஏற்பட்டதில்லை!"

இந்திய அமைதிப்படைக் காலத்தின் அனுபவங்களை எழுதிய திபீந்தர் சிங் பல உண்மைகளை குறிப்பிட்டுள்ளார். நிர்ப்பந்தம் இருந்திருந்தால் அதனைக் கூறாமல் விட்டிருக்கவும் மாட்டார்.

இன்னொரு கட்டுக்கதை பற்றி அடுத்த வாரம் கூறுகிறேன்.

(தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## சூடான கடிதமும் சுவையான பதிலும்

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம், இத் தொடரில் தன்னைப் பற்றிக் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சூடான பதில் தந்துள்ளார். அப்பதிலும், அதற்கான என் பதிலும் அடுத்த வாரம் தரப்படும்.

## தவறும் திருத்தமும்

அரசியல் தொடர் 158ல் ஒரு சிறு தவறு நிகழ்ந்துள்ளது. புலிகள் இயக்க யாழ் அரசியல் பொறுப்பாளராக இருந்த கந்தசாமி (மேஜர் டயஸ் கந்தசாமி- அரியாலை) நல்லூர் மோதலில் பலியானதாக குறிப்பிட்டிருந்தேன் அது தவறு. பருத்தித்துறையில் தம்பசெட்டி என்ற இடத்தில் நடந்த மோதலில்தான் பலியானார். இவருடன் இரண்டாம் லெப்டினன்ட் சுதா (பருத்தித்துறை) என்பவரும் பலியானார்.

இச் சம்பவத்தில் இந்தியப்படை நடத்திய தாக்குதலில் திக்கம், வியாபாரி மூலை ஆகிய பகுதிகளில் பத்து பொது மக்களும் கொல்லப்பட்டனர்.